**பதிவஞ்சல் மூலமாக**

**ந.க.எண்.9763/ ப.தொ.4/ 2019/ இரு.3**

பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு
மருந்துத்துறை, சென்னை – 6.
நாள் :15.03.2021

பொருள் : பணியாளர் தொகுதி – பொது சுகாதாரம் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திரு.சி.ரமேஷ்குமார் த/பெ (அமரர்) திரு.பி.சித்தன் - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு பணிவரன் முறைப்படுத்தப்பட்டது – ஆணை வரப்பெற்றது – தொடர்பாக.

12 APR 2021

பார்வை:
1. இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.9763/பதொ4/2019/இரு3 நாள்.26.02.2019.
2. துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் நாமக்கல் அவர்களின் கடித ந.க.எண்.2012/அ5/2019, நாள்.23.10.2019.
3. அரசாணை (2ப) எண்.25, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏபி1) துறை, நாள்.11.02.2021.
4. அரசு கடித எண்.25998/ஏபி1/2020–2, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள்.11.02.2021.

-------

பார்வையில் ஒன்றில் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி திரு.சி.ரமேஷ்குமார் என்பவர் கருணை அடிப்படையில் துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் நாமக்கல் அலுவலகத்தில் தற்காலிக இளநிலை உவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டார்.

2.பார்வை மூன்றில் காணும் அரசாணையின்படி தனியர் பணியில் இணைந்த நாளான 06.03.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் மு றைப்படுத்தப்பட்டு ஆணை வெளியிடப்பட்டதை தொடர்ந்து தனியரின் அனைத்து அசல் சான்றிதழ்களும் பார்வை நான்கில் காணும் அரசு கடிதத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது.

3. எனவே பார்வை இரண்டில் காணும் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற தனியரின் கீழ்கண்ட அசல் சான்றிதழ் மற்றும் அரசாணையை அனுப்புவதுடன் அவற்றை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையை அனுப்பிவைக்குமாறு நாமக்கல் துணை இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் நாமக்கல் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

| | |
|---|---|
| 1 | பத்தாம்வகுப்பு சான்றிதழ் (அசல்) |
| 2 | மாற்றுச் சான்று (அசல்) |

சு.தாமரைசெல்வம்
இணை இயக்குநர் (நிர்வாகம்)

பெறுநர்

**துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் நாமக்கல்** : அரசாணை (2ப) எண்.25 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏபி1) துறை, நாள்.11.02.2021 அசல் ஆணை தனியருக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார் . (அரசாணை இணைக்கப்பட்டுள்ளது)



Scanned with OKEN Scanner

நகல்

திரு.சி.ரமேஷ்குமார், இளநிலை உதவியாளர்,
துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் நாமக்கல்
துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் நாமக்கல் மூலமாக:
இருப்புக்கோப்பு / உபரி-2.

//உண்மைநகல் //உத்தரவின்படி //அனுப்பப்படுகிறது/

3/3/24

கண்காணிப்பாளர்

31/3/2024

Scanned with OKEN Scanner

**சுருக்கம்**

பொதுப் பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படை பணி நியமனம் – பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை – திரு.சி.ரமேஷ்குமார், இளநிலை உதவியாளர், த/பெ. (அமரர்) திரு.பி.சித்தன், சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அலுவலகம், நாமக்கல் – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏபி1) துறை**

அரசாணை (2ப) எண்.25

நாள் 11.02.2021.
திருவள்ளுவர் ஆண்டு 2052
சார்வரி, தை – 29

12 APR 2021
நாமக்கல்

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
3. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கடித எண்.9763/ப.தொ.4/இரு.3/2019, நாள் 06.05.2020.

-----

**ஆணை:**

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் சேலம் சுகாதாரப் பகுதி மாவட்டம், தேவூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுகாதார ஆய்வாளர் நிலை–1 ஆக பணியாற்றி வரும்போது 10.01.2006 அன்று பணியிடை மரணமடைந்த அரசு ஊழியர் திரு.பி.சித்தன் என்பவரின் மகன் திரு.சி.ரமேஷ்குமார் என்பவர் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 06.03.2019 அன்று முற்பகல் நாமக்கல் சுகாதாரமாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அலுவலகத்தில் பணியில் இணைந்தார் என்று தெரிவித்து, தனியரின் தற்காலிகப் பணியினை, அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் இணைந்த நாளான 06.03.2019 அன்று முற்பகல் முதல் வரன்முறைப்படுத்துமாறு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. அரசு, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை, 03.08.2010 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் கடித எண்.19205/க்யூ1/2010 மற்றும் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை ஆகியவற்றில் அறிவுறுத்தியுள்ளவாறு, சான்றிதழ்கள் / ஆவணங்கள் ஆகியவற்றுடன் ஆய்வு செய்தபோது, திரு.சி.ரமேஷ்குமார் என்பவர் கருணை அடிப்படை பணி நியமனம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பது தெரிய வருகிறது.

Scanned with OKEN Scanner
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

3. மேலும், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லைக்குள் வரும் பதவிகளில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தேர்வாணையத்தின் இசைவு பெறுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

4. இந்நிலையில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.சி.ரமேஷ்குமார் என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 06.03.2019 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பதவிக்கான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்யலாம் என்று அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு தனியரின் பணியினை முன்னாளிட்டு வரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

5. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண் 1295/க்யூ1/2021–1, நாள் 27.01.2021 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண் 2639/ஜி2/2021–1, நாள் 03.02.2021 ஆகியவற்றின் ஒப்புதலோடு இவ்வாணை வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ.ராதாகிருஷ்ணன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்**

<u>பெறுநர்</u>
இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை– 600 006.
தனியர், (இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை–600 006 வழியாக.)
மாநிலக் கணக்காயர், சென்னை– 600 018.
மாவட்ட கருவூல அலுவலர், நாமக்கல்.
<u>நகல்</u>
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவு பிரிவு) துறை, சென்னை–600 009.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

R.NO: 2012/A5/2019 Dt: .04.2021 O/o
O/o the Deputy Director of Health Services,
Namakkal.

Forwarded,
Deputy Director of Health Services
Namakkal.

To,
Thiru. S. Rameshkumar. Junior Assistant
O/o DDHS Namakkal.

Scanned with OKEN Scanner